காரணத்தைக் கூறி அந்த இடத்திற்குப் பட்டா அளிக்க முடியவில்லை என்று கூறியிருக்கின்றார்கள். என்றாலும், அந்த இடத்தில் மீன் உலர்களமாவது அமைத்துத் தர நான் முயற்சி செய்து வந்தேன். இப்போது குளிர்சாதன வசதி செய்து மீன் அங்காடி அமைப்பதற்கு வாய்ப்பு இல்லையென்றால், இந்தப் பனையூர் பெரியகுப்பத்தில் உள்ள இடத்தில் மீன் உலர்களமாவது அமைத்துத் தர அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அந்த இடத்தில் மீன் உலர்களம் அமைத்துக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

20—

பால் பவுடர்

***123138—திரு. வை. காவேரி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

2011 பிப்ரவரி 7]

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகுடஞ்சாவடி உள்ளிட்ட சங்ககிரி தாலுகாவில் தினந்தோறும் சுமார் 15,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. அதேபோல, எடப்பாடி வட்டாரத்திலும் சுமார் 20,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இவை அனைத்தும் சேலம் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு அனுப்பப்படுகிறது. எடப்பாடி, சங்ககிரி, மேட்டூர் தாலுகா உள்ளிட்ட பகுதிகளில் கொள்முதல் செய்யப்படும் அனைத்துப் பாலையும்கொண்டு, மகுடஞ்சாவடியில் ஒரு பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைத்து, பால் பவுடர் உற்பத்தியை அதிகரித்து பால் பவுடர் விநியோகம் செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி தொகுதியில் மொத்தம் 46 சங்கங்கள் செயல்படுகின்றன. இந்தச் சங்கங்களின்மூலமாக ஏறத்தாழ 17,700 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, 1,491 லிட்டர் பால் உள்ளூரிலேயே விற்பனை செய்யப்படுகிறது. மீதமுள்ள 16,209 லிட்டர் உபரி பால், சேலம் பால் பண்ணைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. பால் பவுடர் தயாரிப்பதற்கான ஒரு தொழிற்சாலைக்கு 40 கோடி ரூபாயும், 30 ஏக்கர் நிலமும் தேவைப்படுகின்றது. தற்போது சேலத்திலேயே ஒரு இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன்கொண்ட பால் பவுடர் தொழிற்சாலை ஒன்று அமைந்து செயல்பட்டு வருவதால், தற்போதைக்கு எடப்பாடியில் தனியாகப் பால் பவுடர் தொழிற்சாலை அமைப்பதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எத்தனை இடங்களில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன? தினந்தோறும் எவ்வளவு பால் பவுடர் உற்பத்தி செய்யப்படுகிறது? பால் பவுடர் வேறு மாநிலங்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறதா? பள்ளிக் குழந்தைகளுக்கு முட்டை வழங்குவதைப்போல பால் பவுடரையும் சேர்த்து வழங்க, மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் ஒரு நாளைக்கு சராசரியாக 22.37 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த அளவுக்கு ஈரோடு, சேலம், மதுரை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்ட ஒன்றியங்களில் நாள் ஒன்றுக்கு 7 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன்கொண்ட பால் பவுடர் தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. தற்போது திருவண்ணாமலை மாவட்டத்தில் தினசரி 2 மெட்ரிக் டன் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைப்பதற்கான பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொள்வதைப்போல தற்போது வரக்கூடிய பாலினை வைத்துக்கொண்டு பால் பவுடர் தயாரிப்பதற்கான தொழிற்சாலைகள் 4 இடங்களில் இருக்கின்ற காரணத்தால், மீண்டும் ஒரு தொழிற்சாலையை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது ஏதும் இல்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

11—

கட்டட வசதி

*28550—திரு. அ. தமிழரசு:

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராசிபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?